# செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் சென்ற எட்டுத் தமிழ் இளைஞரில் இருவர் கொலை

கிழக்கு மாகாணத்தில் திருக்கோயில் என்ற இடத்தில் இம் மாதம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை எட்டுத் தமிழ் இளைஞர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விஷேட அதிரடிப் படையின் அனுமதியுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் ஏற்றிக் கொழும்புக்குக் கொண்டு சென்ற வழியில் சம்மாந்துறையில் இந்த வாகனம் இராணுவத்தால் மறிக்கப்பட்டு அதில் இருந்த எட்டுத் தமிழ் இளைஞர்களும் இறக்கப்பட்டனர். உடனேயே இரு இளைஞர்கள் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர், ஏனைய ஆறு பேரும் சம்மாந்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதேவேளை மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை இராணுவம் சுட்டதில் இருவர் பலியானார்கள். ஒருவர் காயமடைந்தார். மற்றொரு சம்பவத்தில் அதிரடிப் படையினர் 4 பொதுமக்களைக் கைது செய்து அதில் ஒருவரைச் சுட்டுக்கொன்றனர். (71 ரு)


பக்கங்கள் நான்கு விலை ரூபா:-3-50

முரசொலி

முரசு 4 ஒலி 240 வியாழன் 11-10-1990 (புரட்டாதி 25) ற.அவ்வல் 21


நல்லூர், கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய

# யாழ்நகருக்கு அண்மித்த பகுதிகளில் நேற்று மீண்டும் பொம்மர் தாக்குதல்

## குழந்தையை அரவணைத்தபடி தாய் ஸ்தலத்தில் பலி இருவர் கால்களை இழந்தனர்

**கடந்த இரு வாரங்களுக்குப் பின்னர் மீண்டும் யாழ் நகருக்கு அண்மித்த பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்கள் இரு தடவைகள் தாக்குதல்களை நடாத்தின. இதில் ஒரு தாயும், அவரது 2 வயதுக் குழந்தையும் கொல்லப்பட்டனர்.**

நேற்றுக் காலை 9.30 மணியளவில் வந்த மூன்று பொம்மர்கள் நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் மாறி மாறித் தாக்குதல்களை நடாத்தின.

கோண்டாவில் கிழக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலால் அங்கிருந்த வரதராசா சிவபாக்கியம் என்ற பெண்மணி தனது எட்டு நாள் குழந்தையை அரவணைத்தபடி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

இப் பெண்ணின் 2 வயதுக் குழந்தை யதீஸ்வரன் குடல்

—04ஆம் பக்கம் பார்க்க

## கோட்டையைச் சுற்றி நேற்று மீண்டும் விமானத்தாக்குதல்

கடந்த மாதம் 27ஆம் திகதி காலை யாழ் நகரில் இடம்பெற்ற வை 12 விமானத்தாக்குதலுக்குப் பின்னர் நேற்று மாலை மீண்டும் அதன் தாக்குதல் இடம் பெற்றது

நேற்று மாலை 3 மணியளவில் இந்த விமானம் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூன்று குண்டுகளைப் போட்டது. இதில் ஒன்று பண்ணை பழைய பஸ் நிலையத்தில் விழுந்து வெடித்தது. (ப 25, 7, ப 11, 33 ரு)

## ஹெலி சுட்டது

நேற்றுக் காலை கண்டி வீதியில் பயணம் மேற்கொண்டோர் மீது எழுதுமட்டுவாழ், கிளாலி, பளை, இயக்கச்சி, புதுக்காடு, வேம்போடு கேணி ஆகிய இடங்களில் ஹெலியிலிருந்து தாக்குதல் நடாத்தப்பட்டது. (ப 3 ரு)

## சாவகச்சேரிச் சம்பவம் மேலும் இருவர் மரணம்

நேற்று முன்தினம் சாவகச்சேரிச் சந்தைப் பகுதியில் நடாத்திய ஹெலித்தாக்குதலில் மேலும் இருவர் மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமானார்கள்.

இதில் ஒரு பெண்மணியும், முதியவரும் இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இத் தாக்குதலின்போது மொத்தமாகப் 12 பேர் பலியாகினர்

—04ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரிப் பகுதியில் நேற்று பூரண துக்கதினம்

நேற்று முன்தினம் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஹெலிகப்டர் தாக்குதலில் உயிரிழந்தோரின் தொகை மேலும் அதிகரித்துள்ளது.

மேற்படி நடந்த தாக்குதலில் மரணமானவர்களிற்கு அஞ்சலி செலுத்துமுகமாக சாவகச்சேரியில் நேற்றுக்கடைகள் பூட்டப்பட்டு சோககீதங்கள் இசைக்கப்பட்டு பூரண துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1987 அக்டோபரில் இடம் பெற்ற பாரிய தாக்குதலின் பின்னர் இடம் பெற்ற பெரிய தாக்குதல் இதுவாகும்,

ப 4, 70, 71 ரு

## வங்காலையில் 6 இராணுவம் புலிகளால் பிடிக்கப்பட்டனர்

வங்காலைப் பகுதியில் இறங்குதுறை அமைத்து அருகேயுள்ள வீடுகளை எரித்து அட்டகாசம் புரிந்து வந்த இராணுவத்தினர் 6பேர் விடுதலைப்புலிகளினால் பிடிக்கப்பட்டு கொலைசெய்யப் பட்டனர்.

இதில் பிடிபட்ட இராணுவ உயர் அதிகாரியின் தலை வெட்டப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் பிடிபட்ட இராணுவத்தினர்

—04ஆம் பக்கம் பார்க்க

தேசிய இளைஞர் மன்ற

## வடபகுதி ஊழியர்களுக்கு வேலை நீக்கக்கடிதங்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அமைய ஊழியர்களாகக் கடமையாற்றிய சுமார் 15 பேருக்கு சேவை நீக்கக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தில் அமைய ஊழியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கே 01-08-90 லிருந்து இவ்வாறு சேவை நீக்கக் கடிதப் அனுப்பிவைக்கப்

—04ஆம் பக்கம் பார்க்க

## வங்கி முகாமையாளரைத் தாக்க முயன்றாராம்

மதுபோதையில் வங்கி முகாமையாளரைத் தாக்க முயன்ற நபரை ஊழியர்கள் தடுத்து நிறுத்தி அப்புறப்படுத்திய சம்பவம் நேற்று யாழ் ஹட்டன் நாஷனல் வங்கியில் இடம்பெற்றது.

இங்கு சென்றஒருவாடிக்கையாளர் தனக்கு அதிகளவு பணம் வேண்டுமென்று அடம் பிடித்தாராம் தற்போதைய

—04ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு சென்ற 10,000பேர் வவுனியா அரச அகதிமுகாமில்!

கொழும்பு செல்வதற்கென கடந்த மூன்றுதினங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து சென்றோர் வவுனியா அரச அகதிமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது வவுனியா அகதிமுகாமில் கொழும்பு செல்வதற்கென சென்றசுமார் பத்தாயிரம்பயணிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து செல்லும் யாழ் தேவி புகையிரதத்

—04ஆம் பக்கம் பார்க்க

## 3 ஆம் கட்ட உணவு நிவாரணம் நாளை முதல் ஆரம்பமாகும்

நாளை 12-ந் திகதி முதல் இடம்பெயர்ந்தோருக்கான 3-ம் கட்ட இலவச உணவு விநியோகமும் மற்றும் உணவு முத்திரை பெறுவோர், ஜன சக்தித் திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவோர், 70 ரூபாவக்கும் 1499 ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானம் பெறுவோர் ஆகியோருக்கான 2-ம் கட்ட இலவச உணவு விநியோகமும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நேற்று யாழ் செயலகத்தில் யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் தலைமையில்நடைபெற்ற உயர் மட்ட அதிகாரிகளின் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள உணவு விநியோக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அளவுகளுக்கும் பெறுமதிக்கும் ஏற்றவாறு இந்த விநியோகமும் நடைமுறைப் படுத்தப்படும்.

12-ந் திகதி ஆரம்பமாகும் இவ் விநியோகம் இம் மாதம் 22-ம் திகதிக்கு முன்னர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ட்ரான்ஸ்போமர்களில் இரவு நேரம் டீசல் திருட்டு

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மின்சார ட்ரான்ஸ்போமர்களில் அண்மைக்கால சம்பவங்களையடுத்து இரவு நேரங்களில் ஹெவி டீசல் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டுக்களால் மின்சாரம் வழங்குவதில் மேலும் தாமதங்கள் ஏற்படலாமென்று மின்சாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சில பகுதிகளில் விழிப்புக்குழுக்கள் இருந்தும் இத்திருட்டுக்கள்

—04ஆம் பக்கம் பார்க்க

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் சகலருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான கடிதங்கள் கல்விச்சேவை ஆணைக் குழுவினால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்படி 1989-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது ஒருவருடமாவது தொண்டராசிரியராகக் கடமை புரிந்தவர் அனைவருக்கும் ஆரம்ப ஆசிரிய நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகக்கடந்த 30-ம் திகதி முரசொலியில் செய்தி வெளியாகியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

# ★ விடுதலைப் புலிகள் லண்டனில் கோரிக்கை
# மனித உரிமை இயக்கங்கள் கிழக்குத் தமிழரை காக்கவேண்டும்

கிழக்கிலங்கையில் தமிழர்கள் திட்டமிட்ட அடிப்படையில் கொல்லப்படுவதைத் தடுக்க சர்வதேச மனித உரிமைகள் இயக்கங்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் இயக்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப்புலிகள் லண்டனில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

கிழக்கிலங்கையில் தமிழர்கள் இலங்கை அரசால் திட்டமிட்ட அடிப்படையில் கொல்லப்பட்டு வருகின்றனர். வீடுகளிலிருந்து துரத்தப்பட்ட தமிழர்கள் அகதிமுகாம்களில் இருப்பதற்குக்கூட அரசு விடுவதாயில்லை.

இந்த மனித உரிமை மீறல் பற்றி வெளியுலகுக்குச் செய்திகள் செல்வதுகூட இலங்கை அரசால் தடுக்கப்பட்டுள்ளது.

இப்படி விடுதலைப் புலிகளின் லண்டன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்கில் அகதி முகாம்களிலிருந்துவந்த 65,000 அகதிகளும் முகாம்களை விட்டு வெளியேறி காட்டுப்பகுதிகளுக்குச் சென்றுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்திவெளியிட்டுள்ளது. முகாம்களில் தங்கியிருக்கும் தமிழர்களை அடிக்கடி படையினர் பெரும் எண்ணிக்கையில் கைதுசெய்து வருவதினாலே மக்கள் அச்சமடைந்து முகாம்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதெனவிடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (கி)

## பீற்றூட்டிலிருந்து மதுபானம்; விரைவில் விற்பனைக்கு வரும்

பீற்றூட் கிழங்கிலிருந்து பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்டு வரும் பிறண்டிக்குச் சமமான உயர்ந்த ரக மதுபானம் ஒன்று விரைவில் யாழ் குடாநாட்டில் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது.

பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சிப் பிரிவும். உற்பத்திப் பிரிவும் இணைந்து இந்த முயற்சியில் வெற்றி கண்டுள்ளதாக அறியப்படுகிறது.

வடக்கில் தென்னை, பனை மரங்களிலிருந்து கள்ளுக்குப் பதிலாகப் பெரும்பாலும் பதநீர் இறக்கப்பட்டு சீனி உற்பத்திக்கான நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு வருவதாகவும், கள்ளு உற்பத்திக் குறைவால் சாராயத் தட்டுப்பாட்டுக்கு ஈடு கொடுக்கத்தக்க வகையில் இந்த பீற்றூட் மதுபானத் தயாரிப்பு கைகொடுத்து உதவுமென்றும் இது தொடர்பான உத்தியோகத்தர்கள் கருதுகின்றனர்.

பீற்றூட் கிழங்கிலிருந்து தயாரிக்கப்பட்டுவரும் மதுபானம் சங்கானையில் உள்ள வடிசாலையில் பரீட்சிக்கப் பட்டுவருவதாக பனை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர் தெரிவித்தார். (33கி)

## ஐந்துவருட இடைவெளியின் பின் மீண்டும் சிங்கப்பூர் கப்பல் சேவை

சிங்கப்பூருக்கும்-சென்னைக்கும் இடையேயான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

15நாட்களுக்கு ஒருதடவை நடாத்தப்படவுள்ளஇக்கப்பல் சேவையில் 800 பயணிகள் பயணம் செய்யக்கூடிய இடவசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 48 தொன்னுக்கு மேற்படாத பொதிகளும் இச் சேவையில் எடுத்துச்செல்லப் படும்.

முன்னர் சென்னை - சிங்கப்பூர் பயணிகள் சேவையில் எம். எஸ். சிதம்பரம் என்ற இந்திய ஆடம்பர பயணிகள் கப்பல் ஈடுபட்டுவந்தது. பின்னர் இக் கப்பல் தீக்கிரையானதை அடுத்து கடந்த ஐந்து வருடகாலமாக சென்னை-சிங்கப்பூர் பயணிகள் கப்பல் சேவை இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

### கல்விஅதிகாரியாக பதவிஉயர்வு

நயினாதீவு கொத்தணி அதிபராக இதுவரை கடமையாற்றிய என். சண்முகநாத பிள்ளை வேலணைக்கோட்டக்கல்வி அலுவகத்துக்கு கல்வி அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார். (ப17கி)

### தேவஸ்தானத்துக்கு உணவு வருகிறது

கொழும்புசைவ முன்னேற்றச் சங்கம் மூலம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்திலுள்ள அகதிகளுக்கு வழங்கப்படுவதற்காக 14 மெட்றிக்தொன் உணவுப்பொருட்கள் கப்பல்மூலம் கொழும்பிலிருந்து அனுப்பப்படஉள்ளதாக மேற்படி தேவஸ்தானத்தின் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

இவை மயிலிட்டி, வசாவிளான்,வீமன்காமம் போன்ற இடங்களில் இருந்து இங்கு தங்கிஉள்ள சுமார் 700 அகதிகளுக்கு வழங்கப்பட உள்ளதாக அவர்கூறினார்.(ப 17கி)

## நயினாதீவு, நெடுந்தீவு படகுச்சேவை மீண்டும் ஆரம்பம்

நயினாதீவு, நெடுந்தீவுக்கிடையிலான கடற் போக்குவரத்துச்சேவை கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் காலை 8 மணிக்கு நயினாதீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் படகுச் சேவை நடைபெற்று வருகின்றது.

தினமும் பிற்பகலில் இரு இடங்களுக்கும் குறிகாட்டுவானில் இருந்துபடகுச்சேவை நடைபெறுகிறது. (19 கி)

## விஞ்ஞான உபகரணங்கள் திருட்டு

குரும்பசிட்டி பொன். பரமானந்தா மகாவித்தியாலயம் திருடர்களால் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

தற்போதைய பதற்ற நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த இப் பாடசாலையின் அலுவலக அறை, விஞ்ஞான அறை போன்றவற்றின் ஓடுகளைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் அறைகளில் இருந்த அலுமாரிகளை உடைத்து விஞ்ஞான உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், மனையியல் கூடப் பொருட்கள், நூல் நிலையப் புத்தகங்கள் என்பனவற்றைத் திருடிக் கொண்டு, அறைகளின் கதவுகளையும் உடைத்து வெளியே சென்றுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-10 கி)

## நவீன மோசடி

நேற்று முன்தினம் மலிவு விலையில் தனது காருக்குப் பெற்றோல் வாங்க முயன்ற ஒருவர் தனது சயிக்கிளையும், ரூபா ஆயிரத்தையும், கொள்கலன் ஒன்றையும் கோட்டை விட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: ஈச்சமோட்டை வாசியான அல்பிரட் சிங்கம் என்பவருக்கு, 10 லீற்றர் பெற்றோல், ஒரு லீற்றர் ரூபா 140 க்கு மலிவாக பெற்றுத் தருவதாக் கூறிய ஒருவர் அவரிடம் ரூபா ஆயிரம், சயிக்கிள், கொள்கலன் ஆகியவற்றையும் பெற்றுக்கொண்டு தலைமறைவாகி விட்டார்.

அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர் செய்த முறைப்பாட்டின் பேரில் இதில் தொடர்பு கொண்ட மூவரை விடுதலைப் புலிகள் விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர். ஒருவர் தலைமறைவாகி விட்டாராம். (16ஸ்ரீ)

### முல்லைத்தீவுக்கு மின் விநியோகம்

முல்லைத்தீவு நகரம் தவிர்ந்த முல்லைத்தீவுமாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

விஸ்வமடு,உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, துணுக்காய் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் பழுதடைந்த மின்மாற்றியைத் திருத்த முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (43கி)

### குரங்குகள் அட்டகாசம்

வலி. மேற்குப் பகுதியில் குரங்குகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது என்றுமில்லாதவாறு குரங்குகள் வயல்களிலும், சிறுதானியம் செய்யும் தோட்டங்களிலும் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தற்போதைய உணவு நெருக்கடியை நிவர்த்தி செய்யும் நோக்கத்திற்காக விவசாயிகள் பலரும் சிறுதானிய உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் குரங்குகள் இவற்றைப் பசியாறுகின்றன. இலுப்பம்பழம் விழும் சீசன் என்பதால் குரங்குகள் ஊர்களுக்குள்ளும் புகுந்து கஷ்டங்களைக் கொடுப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை, அராலி, பொன்னாலை, சுழிபுரம், மூளாய், நெல்லியான் ஆகிய பகுதிகளிலேயே கூடிய அளவில் நஷ்டமேற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. (ப-1 கி)

### வவுனியாவில் கொள்வனவு நிலையம்

கூட்டுறவு மொத்தக் கொள்வனவு நிலையம் ஒன்று வவுனியாவில், கண்டி வீதியில் திறக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கடைகள் தத்தமது பகுதிக்குத் தேவையான உணவுப் பொருள்களை மொத்தமாக இங்கு பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகின்றது. (11கி)

### அலுவலகங்கள் சேதம்

வேலணை பிரதேச சபையின் அலுவலகங்கள் யாவையும் இருமுறை இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் பூரணமாக சேதமாக்கப்பட்டு விட்டதனால் மக்கள் இதன் சேவைகளைப் பெற முடியாத நிலையில் தற்போது கஷ்டமடைகின்றனர்.

இத்துடன் ஆயுர்வேத வைத்திய சாலையும் சேதமாக்கப்பட்டதனால் அதுவும் செயற்பட முடியாத நிலையில் உள்ளது. (24கி)

### பெண் ஊழியர் கஷ்டம்

மன்னாரில் கடமையாற்றும் பெண் அரச ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு செல்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒழுங்கான வாகன வசதி இன்மையால் சைக்கிள்களிலேயே இவர்கள் அங்கு செல்ல வேண்டி இருக்கிறது.

இதேபோல நீண்ட தூரம் சைக்கிள்களில் ஓடமுடியாத அரச ஊழியர்களும் பெரும் கஷ்டம் அடைந்து வருகின்றனர். (17கி)

### சிறு விளம்பரம்

**சேவை**

தெளிவானபோட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாள அட்டைகளையும் கவர் இட்டுஉடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளீன் கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட். யாழ்ப்பாணம். (நீராவியடிப் பிள்ளையார்கோவிலுக்கு அண்மையில்) வேலை நேரம் தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6மணி வரை. 10031

**தவறிவிட்டது**

குருநகருக்கும், நாவலர் வீதிக்கு மிடையில் இராஜமுத்திரை என்னும் புத்தகமும் பிறவுண் கலர் சிறிய மணிபேஸும்தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 10057

வேலணை கிழக்கு, பொற்பதியில் வசிக்கும் பொன்னுத்துரை நிர்மலாதேவியாகிய எனது அடையாள அட்டை 28.9.90வெள்ளிக்கிழமை வேலணைஇலந்தைவனம் பிள்ளையார் கோவிலிருந்து வேலணை மேற்கு முடிப்பிள்ளையார்கோவிலுக்குச் சென்ற பொழுது குறித்தஇருகோயில்களில் அல்லது வழியில் பேர்ஸ் உடன் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் குறித்த கோவில் பூசகரிடம் அல்லது மேல்குறித்த விலாசத்தில் ஒப்படைக்குமாறு தயவாக வேண்டுகின்றேன். 10058

### உப்பு விலை அதிகரிப்பு

தீவுப்பகுதிகளில் உப்பு விலை திடீரென அதிகரித்துள்ளது.

தற்போது இங்கு ஒருகிலோ உப்பு எட்டுரூபாவாக விற்கப்படுகிறது. முன்னர் உப்பு இரண்டு ரூபா ஐம்பது சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (24 கி


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**பட்டப்பின் கல்வி டிப்புளோமா -1990**

பகுதிநேரக் கற்கை நெறிகள் பகுதி I, பகுதி IIக்கான விரிவுரைகள் 1990 நவம்பர் 10 -ம் திகதி ஆரம்பமாகும்.

முழுநேரக் கற்கை நெறிக்கான விரிவுரைகள் 1991 ஜனவரியில் ஆரம்பமாகும்.

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1990. 10. 09

10056

UNIVERSITY OF JAFFNA

**POSTGRADUATE DIPLOMA IN EDUCATION**

The Lectures for the Part - Time Course Parts one and two will Commence on the 10 th November, 1990.

The Full Time Course will Commence on January, 1991.

Vice - Chancellor
University of Jaffna,
Thirunelvely.
1990. 10. 09

10055

முரசொலி

## எமது சிந்தனை

1990 - 10 - 11 வியாழன்

''நியூயோர்க்கின் விண்ணை முட்டும் மாடங்கள் என்னதான் புகழ்பெற்றவையாயிருந்த போதும், அவற்றைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால், அந்நகரத்தின் பத்து மில்லியன் மக்களும் ஒருமித்து, சமாதானமாக, கண்ணியமாக வாழும் வழிவகைகளைக் கண்டதேயாகும்.''

- டேவிட் லிலியன்தொல்

## கூட்டுறவு

கூட்டுறவு இயக்கத்துக்கு நீண்டதொரு வரலாறு உண்டு. வேறெங்கும் இல்லாத அளவுக்கு, அது, வடபகுதியில் வேர்கொண்டு ஓங்கி, வளர்ந்து, விருட்சமாகி, மக்களுக்கு நிழல் தருகிறது.

கூட்டுறவுத் தத்துவத்தைப் புரிந்துகொண்டு, அதை மக்களிடையே பிரபலப்படுத்திய வீரசிங்கம் முதலிய முன்னோடிகள் தேசியத் தலைவர்களாக மதிக்கப்பட்டார்கள்.

விவசாயத்தில், நெசவுத்தொழிலில், தெங்கு - பனம்பொருள் உற்பத்தியில், மீன் பிடித்துறையில், வங்கிச் சேவையில் - எங்கும் - எதிலும் - கூட்டுறவு கொடிகட்டிப் பறந்தது.

தனியார் துறையை வாழவைக்கவும் பொதுத்துறையைச் சாகடிக்கவும் திடசங்கற்பம் பூண்ட ஐ. தே. க. அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, கூட்டுறவுத் துறை பெரும் பாதிப்புக்குள்ளாகியது.

அரசாங்க அரவணைப்பில் வளர வேண்டிய ப. நோ. கூ. சங்கங்கள் தனியார் நிறுவனங்களோடு போட்டியிட முடியாது தளர்ந்தன. ஒரு சில சந்தர்ப்பங்களில் தனியார் ஸ்தாபனங்களின் தயவில் இயங்க வேண்டிய பரிதாப நிலைக்கும் தள்ளப்பட்டன.

1983 ஆம் ஆண்டின்பின், கொழும்பு - யாழ் பயணத்தில் உயிராபத்தும் பொருள் இழப்பும் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கவே, நமது ப. நோ. கூ. சங்கங்கள் முடங்கிப்போயின.

1987 இல் இடம்பெற்ற இரு ராணுவ நடவடிக்கைகளிலும் பல கூட்டுறவுச் சங்கங்கள் தவிடுபொடியாயின. நல்லூர் ப. நோ. கூ. சங்கத்துக்கு ஏற்பட்ட நட்டம் ஒரு கோடி ரூபா.

இவ்வாண்டு ஓகஸ்ற்றில், ஊர்காவற்றுறையில் இறங்கிய ஸ்ரீலங்கா ராணுவம் செய்த அழிவால், ஊர்காவற்றுறை, வேலணை ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்பு பல கோடி ரூபா.

இத்தனையும் நடந்தும் - போர் தொடங்கிய இந்த நாலுமாத காலத்தில் - நமது ப. நோ. கூ. சங்கங்கள் ஆற்றியுள்ள பணி மகத்தானது. கூட்டுறவுத் துறை ஊழியர்களின் தன்னலமற்ற சேவையினால் அல்லவா, குடாநாடு பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றப்பட்டது!

ஹெலிச்சூட்டுக்கு மத்தியில் பருத்தித்துறையிலிருந்து பொருள்களை ஏற்றிவந்து, ஊரடங்கு அமுலில் இருக்கும் வேளையில் உணவுப்பங்கீட்டை நடத்திச் சாதனை புரிந்துள்ளார்கள் அவர்கள்!

பணியாளர்கள் காயமடைந்த சந்தர்ப்பங்கள் பல! ''எங்கள் உயிருக்கு என்ன உத்தரவாதம்?'' என்று அவர்களோ அவர்கள் குடும்பத்தவர்களோ கேட்கவில்லை!

கூட்டுறவுச் சங்கங்கள் - மறைமுகமாக - கறுப்புச் சந்தையையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன.

யாழ் அரச அதிபர் விதித்த காலக் கெடுவுக்குள் பெரும்பாலான சங்கங்கள் இரண்டாம் கட்ட இலவச உணவுப் பங்கீட்டையும் செய்து முடித்துள்ளன. இப்பொழுது 1500 ரூபாவுக்கு மேல் வருமானமுள்ளவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில், இவை பெரும் சாதனைகள் என்றே கூற வேண்டும்.

போரினால் தமிழ் மக்களுடைய ஞாபக சக்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. இல்லாவிட்டால், கஷ்ட காலத்தில் கூட்டுறவின் பக்கம் திரும்பிய மக்கள் வவுனியாக் கடவையின் இறுக்கம் தளர்ந்தவுடன் குறை காணத் தொடங்குகிறார்கள். தாமதங்களைச் சகித்துக்கொள்ள அவர்கள் தயாரில்லை! கூட்டுறவுத்துறை ஊழியர்களும் மனிதர்கள், அவர்கள் தொடர்ச்சியாக வேலை செய்கிறார்கள், போரினால் ஏற்படும் பாதிப்பு அவர்களுக்கும் உண்டு என்று சிந்திப்பதில்லை!

நெருக்கடியான இக்கால கட்டத்தில், உணவுப் பங்கீட்டுக்கும் அப்பாற்போய் - சேவை நோக்குடன் - கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றுகின்றன. நல்லூர் ப.நோ. கூ. சங்கம் கப்பலில் வந்த பொருள்களை தனது வாகனங்களில் வேறு சில சங்கங்களுக்கு ஏற்றி உதவுகிறது தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் தபாற் பொதிகளை ஏற்றி இறக்குகிறது.

இத்தனைக்கும், டீசலுக்கு அறா விலை கொடுத்தே அவர்கள் இந்தச் சேவையைச் செய்கிறார்கள். இந்தச் செலவை ஈடுசெய்ய அரசாங்க அதிபர் முயற்சி செய்ய வேண்டும்.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஒன்று தெளிவாகிறது: நிவாரணப்பொருள் விநியோகம் சம்பந்தமான கொள்கையை வகுப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் கலந்தாலோசிக்கப் படுவதில்லை. இதனால் உதவி அரசாங்க அதிபர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஓர் இடைவெளி நிலவுகிறது. இது நிரப்பப்படவேண்டும்.

அடுத்தது: கூட்டுறவுச் சங்கங்கள் மக்களால் உருவாக்கப்பட்ட தன்னாதிக்கமுள்ள நிறுவனங்கள். அவை பேணி வளர்க்கப்பட வேண்டும்.

### கடற்படையினரிடம் சிக்கி மீண்ட வாலிபர் தகவல்

# அலைகடலில் தத்தளித்த என்னை கடற்புலி எனக்கூறித் தாக்கினர்

''தமிழகம் நோக்கிச்சென்ற படகு பழுதடைந்து திசை மாறியதால் கடலில் நீந்திச் சென்ற என்னைக்கடற்படையினர் பிடித்து திருகோணமலைக் கடற்படை முகாமுக்குக் கொண்டுசென்றனர். நான் வந்த படகு நடுக்கடலில் தத்தளிக்கிறது.பட்டடினியால் பலர் இறந்துள்ளனர் எனக் கூறியதை செவிமடுக்காத அதிகாரிகள், உனக்கு நன்றாக நீந்தத்தெரிகிறது. நீ ஒரு கடற்புலி.கடற்புலிகளுக்குத்தான் இப்படி நன்றாக நீந்தத் தெரியும்.''

மேற்கண்டவாறு வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த துரைராஜா சவுந்தரராஜா (வயது 23) தெரிவித்தார் ,

இவர் சென்ற படகிலிருந்தவர்களிற் பத்துப்பேர் படகில் மரணமாகியிருந்தனர்.

திருமலை, காங்கேசன்துறை, காரைநகர், பலாலி முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டு மன்னாரில் வைத்து 45 நாட்களின் பின் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

''படகுக்குள் நீர் புகுந்ததால் பொருட்களை கடலில் வீசுமாறு கேட்கப்பட்டபோது பயணிகளிடையே சண்டை மூண்டது. உன் பொருளை வீசு என பரஸ்பரம் பயணிகள் சச்சரவுப்பட்டனர்.'' என்றும் கூறினார் அவர்.

''பின்னர் காங்கேசன்துறை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்ட நான் அங்கு வைத்து சிப்பாய்களால் சிகரெட்டினால் சுடப்பட்டேன் ரோமம் லைட்டரினால் எரிக்கப்பட்டது. கால்நகங்கள் பிடுங்கப்பட்டன.

காரைநகர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட நான் அங்கு வைத்தும் பலமாகத் தாக்கப்பட்டேன். உணவு, தண்ணீர் தரப்படவில்லை.

பின் பலாலி முகாமுக்குக் கொண்டு சென்று அங்கு பிணங்களுடன் என்னையும் தூக்கிப்போட்டனர்.

அங்கு ஒரு பெரிய வேப்ப மரம் உள்ளது. அந்த மரத்தில் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டுத் தாக்கப்பட்டேன்.

இவ்வேளை மேலும் 24 இளைஞர்கள் அங்கு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர்.

பின்னர் மன்னாரில் வைத்து நான் விடுதலை செய்யப்பட்டேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(43 ஸ்ரீ)

## லயன்ஸ் இலவச வைத்திய சேவை

அகதி முகாம்களில் தங்கி இருப்போர் நன்மை கருதி ஓர் இலவச வைத்திய சேவை நிலையம், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் எதிர் வரும் 14-ம் திகதி ஞாயிறு காலை 10- மணிக்கு சித்தன்கேணியில் உள்ள வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தொழிற் பயிற்சிக் கட்டிடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந் நிலையத்தில் லயன்ஸ் டாக்டர்கள் இலவசமாகக் கடமையாற்றுவர்.

சகல நோய்களும் இனம் காணப்பட்டு வைத்தியசேவையும், மருந்துகளும் வழங்கப்படும். இச்சேவையைப் பெற விரும்புவோர் தாம் தங்கி இருக்கும் அகதி முகாம் பொறுப்பாளரிடம் இருந்து ஓர் அத்தாட்சிக் கடிதத்தினைப் பெற்றுவருமாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் துரைசிங்கம் ரகு கேட்டுள்ளார். (கி)

## கிராம அலுவலருக்கு மக்கள் பாராட்டு

அண்மையில் யாழ் நகரில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலினால் இடம் பெயர்ந்த ஈச்சமோட்டை, பாஷையூர் மக்கள் கோட்டையில் இராணுவம் வெளியேறியதை அடுத்து மீண்டும் தத்தமது சொந்த இடங்களுக்கு திரும்பிய வண்ணம் இருக்கிறார்கள்.

இலவச உணவு விநியோக இடாப்புத் தயாரித்தல், பங்கீட்டட்டை சிபார்சு செய்தல், துரித கதியில் உணவு வகைகள் பெறக் கூடிய அட்டைகள் கொடுத்தல் ஆகியவற்றில் ஈச்சமோட்டை கிராமசேவகர் ம. சுந்தரலிங்கம் இளைஞர்களின் உதவியுடன் அயராது உழைத்து வருவதாக இப்பகுதி மக்களால் பாராட்டப்பட்டுள்ளார்.

(ப-25கி)

## ஆசிய விளையாட்டுப் போட்டியில் சீனா முதலிடம் பெற்றது

16 நாட்களாக சீனாவின் தலைநகரான பீக்கிங் நகரில் வெகு விமரிசையாக நடைபெற்ற 11-வது ஆசிய விளையாட்டுப் போட்டி, கடந்த 7-ம் திகதி நிறைவெய்தியது. இப்போட்டியில் சீனா முதல் இடத்தையும், தென்கொரியா ஜப்பான் ஆகிய நாடுகள் முறையே 2-ம், 3-ம் இடங்களையும் பெற்றன.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒன்றான இந்தியா இம்முறை ஒரே ஒரு தங்கப் பதக்கத்தை மாத்திரமே ''கபடி'' போட்டியில் பெற்றது. இப்போட்டி இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்க இம்முறைதான் முதன்முதலாக ஆசிய விளையாட்டுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

மேலும் 10-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் (அஞ்சல் ஓட்டம் உற்பட) 5 தங்கப் பதக்கங்களை இந்தியாவிற்கு பெற்றுக்கொடுத்த வீராங்கனை பீ.ரி. உஷா இம்முறை 3 வெள்ளிப்பதக்கங்களை மாத்திரமே பெற்றது மல்லாமல், இனி சர்வதேச மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்கு பற்றப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது:

1994-ம் ஆண்டு நடைபெறவுள்ள 12-வது ஆசிய விளையாட்டுப் போட்டி சரித்திரப் பிரசித்தி பெற்ற ஜப்பானில் உள்ள ஹிரோசிமா நகரில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (16-ஸ்ரீ)

## உதவிக் கல்விப்பணிப்பாளர்களின் பதவிப் பெயர் மாற்றம்

கோட்டக்கல்வி அலுவலகங்களில் பொறுப்பான அதிகாரியாகப் பணிபுரியும் உதவிக் கல்விப்பணிப்பாளர்களின் பதவிப் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

இனிமேல் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பிரதம கல்வி அதிகாரிகள் என அழைக்கப்படுவர்.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து இப் புதிய பெயர் மாற்றம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென கல்வி அமைச்சு பணித்துள்ளது.

(ப-17 கி)

(நேற்றைய தொடர்ச்சி

### மாணவ மணிகளுக்கு

## சுயமாகக் கற்பதற்குச் சில வழிகள்

- 'மணிகண்டன்'

### (இ) பாடக்குறிப்புக்கள்

ஒரு பாடத்தைப் படித்து அதன் சாரத்தையோ, முக்கியமானதையோ அறிந்துகொள்ளவும், அறிந்ததை மீட்கவும் குறிப்புக்களை (Notes) எழுதிக்கொள்வதும் அவசியமே. இந்த முறையினைக் கையாளத் தெரிந்து கொண்டால் பசித்தவனுக்குக் கட்டுச்சோறுபோல அவை உதவும். விடயக்கிரகிப்புக்கு இதுபோன்ற உகந்தவழி வேறு இல்லை.

### (ஈ) மீட்டற்பயிற்சிகள்

செயல்நூல்கள், பயிற்சிநூல்கள் என்று பலவகையான நூல்கள் எல்லாப் பாடங்களுக்குமே வெளிவந்துள்ளன. இவற்றை கவனமாகச் செய்து முன்கூறியதுபோல அவ்வப்போது, அறிந்தார் வாயிலாகத் திருத்தி, பிழைதிருத்தங்களையும் செய்துவந்தால் கற்றவிடயம் சிந்தாது சிதறாது மனத்தில் நிற்கும்.

### நெல்சனின் கதை

ஐரோப்பாவையே கலக்கிய மாவீரனான நெப்போலியனையும் தனது கடற்போராற்றலால் புறங்கண்டவன் நெல்சன் என்ற பிரித்தானிய கடற்படைத்தளபதி. அவன் பாலகனாக இருந்த காலத்தில் அவனுடைய செவிலித்தாய் அவனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு சென்று பாடசாலையில் விடுவது வழக்கம். மழலைமாறாச் சிறுவனாயினும் நெல்சனுக்கு அவளின் செயல் பிடிக்கவில்லை, ஒருநாள் அவன் பாடசாலைவரை அவரோடு சென்றுவிட்டுப் பின்பு அவள் கையை இறுகப் பிடித்து வந்து தன் வீட்டில் விட்டு ''நான் தனித்துப்போவேன் உன் உதவி தேவையில்லை'' என்று சொல்லித் திரும்பிப் பாடசாலைக்கு ஓடினானாம்

இன்றுள்ள இளம் மாணவரிற் பலர் நெல்சனைப்போலத் தன்நம்பிக்கை உடையவர்கள் என்பதற்கு ஐயம் இல்லை. இவர்கள் இதைத் தமது படிப்பிலும் காட்டவேண்டியது அவசியம். 'நன்றும் இன்றே செய்க.'

(முற்றும்)

# சிறிய செய்திகள்

## யாழ் தபால் அதிபருக்குப் பதவி உயர்வு

முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகராக யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபராகக் கடமையாற்றும் திரு. சு. பரராஜசிங்கம் நியமனம் பெற்றுள்ளார். இவர் சரவெட்டியைச் சேர்ந்தவர்.

முல்லைத்தீவு தபால் அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. எஸ். குணரட்ணம் அண்மையில் விமானத் தாக்குதலால் காயமுற்று மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணம் அடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (33-ரூ)

## விசர் நாய் கடித்து இருவர் மரணம்

கிளிநொச்சிப் பகுதியில் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி இருவர் உயிரிழந்தனர். மற்றொருவர் இதனால் பாதிக்கப்பட்டு உருத்திரபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து கிடைக்காததால் இவர்கள் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-6 ரூ)

## வாகன உரிமையாளருக்கு

வவுனியாவிற்கு அப்பால் செல்லும் பொதி சுமக்கும் அனைத்து வாகனங்களும் வட-பிராந்திய பொதி சுமக்கும் வாகன போக்குவரத்துச் சேவைச் சங்கத்தால் வழங்கப்படும் வரிப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## பூநகரியில் உரம் விற்பனை

பூநகரியில் காலபோக நெல் உற்பத்திக்கு விதைப்பின் போது பயன்படுத்தப்படும் உரவகைகள் பெற முடியாது விவசாயிகள் பெரும் அவதியுற்றனர். ஒரு சில தினங்களுக்கு முன்னர் தனியாரினால் ஒரு அந்தர் வீ வண் மிக்சர் உரம் 850ரூபா விற்கு விற்கப்பட்டது.

தற்போது பூநகரி ப. நோ. கூ. சங்கத்தினர் ஒரு அந்தர் வீ வண் மிக்சர் உரத்தினை 600 ரூபாவிற்குவிற்பனை செய்யத் தொடங்கியதைத்தொடர்ந்து தனியார் நிலையங்களிலும் 600ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. கி

---

**சாவகச்சேரி ..**

எனத்தெரியவருகிறது.

ஸ்தலத்தில் பலியான சி. ஸ்கந்தரசாவின் மனைவி மேற்படி மரணமான பெண்மணியாவார். இவர் 3 பிள்ளைகளின் தாயாவார். ஆ, பசுபதி என்பவரே மரணமான மற்ற வயோதிபராவர். (ப-11,71 ரூ)

---

**3.ம் கட்ட—**

சகல பல. நோ. கூ. சங்கங்களும் பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த நிவாரணத்திற்கான பெர்மிட்டுக்களையும், மற்றும் பட்டியல்களையும் சகல உதவி அரசாங்க அதிபர்களும் இன்று தொடக்கம் இம்மாதம் 16-ம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பல நோ. கூ. சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 66 ரூ

## கரைக்கு அருகில் கடற்படைப்படகு

வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையின் பீரங்கிப்படகுகள் கரைக்கு மிக அண்மையாக இரவு, பகல் வேளைகளில் செல்வதால் இப்பகுதியில் கட்டுமரங்களில் மீன்பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கு அஞ்சுகின்றனர்.

இதனால் மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் மீனின் விலையும் அதிகரித்துள்ளது. 18கி

## மனித உரிமைகள் அலுவலகம் தரைமட்டம்

யாழ் நகரில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலினால் 3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள மனித உரிமைகள் இல்ல அலுவலகம் தரைமட்டமாகியுள்ளது.

இம்மாதம் 6ஆம் திகதி இங்கு சென்ற இதன் ஊழியர்கள் அங்கிருந்து ஆவணங்கள், புத்தகங்களை பலத்த சிரமத்தின் மத்தியில் அப்புறப்படுத்தினார்கள். (71ரூ)

## பருத்தித்துறையில் இரு வங்கிகள் இயங்குகின்றன

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியும், பருத்தித்துறை இலங்கை வங்கியும் செயற்படத் தொடங்கியுள்ளன. (15ரூ)

## நாளை முக்கிய கூட்டம்

யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள், பல. நோ. கூ. சங்க தலைவர்கள் பொது முகாமையாளர்கள் அனைவரையும் இலவச உணவுப் பொருட்கள் விநியோகம் சம்பந்தமாக நாளை 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு வருகைதருமாறு யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

## இரவு நேரங்களில் வீட்டுக்கு கல்வீச்சு

மானிப்பாய் ஆஸ்பத்திரி பின் வீதியில் உள்ள வீடு ஒன்றிற்கு கடந்த சில நட்களாக இரவு நேரங்களில் கற்கள் வீசப்படுகின்றன. இதே வீட்டின் வாசலில் கழிவுப் பொருட்கள் காணப்படுகின்றன.

நேற்று முன் தினம் இரவு இந்த வீட்டில் இருந்த பெண்கள் கற்கள் விழுந்ததும் அச்சத்தால் வீதியால் ஓடிச் சென்றதையும் காண முடிந்தது. இதனைத் தடுக்க தங்களுக்கு எவரும் உதவுவதில்லை என இவர்கள் புகார் தெரிவிக்கின்றனர் 71ரூ

---

**வங்காலையில் ...**

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்துஉணவுப்பொருட்களை மன்னார் நெடுஞ்சாலை வழியாக வங்காலைப்பகுதியில் இருந்து எடுத்துச் செல்வதற்கே தினமும் வந்து செல்பவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (71-ரூ)

---

**கொழும்பு ...**

தில் பயணம் செய்வதற்கென அகதிமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்போரில் தினமும் ஆயிரம் பேர் இராணுவத்தினால் அனுமதிக்கப்படுவதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# உணவுப் பொருட்களின் விலை தினமும் வீழ்ச்சியடைகிறது

யாழ்ப்பாணப் பகுதியில் இலவச உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதையடுத்து இங்குள்ள சந்தைகளிலும், தனியார் கடைகளிலும் அரிசி, மா, சீனி, பருப்பு மற்றும் உணவுப் பொருட்களின் விலைகளும் பெரும் வீழ்ச்சியடைந்து வருகிறது.

தற்போது வங்கிகளில் ஓரளவு பணக் கொடுப்பனவு இடம்பெறுவதால் பொதுமக்களிடம் பணப்புளக்கம் ஏற்பட்டுவருவதும் இந்த வீழ்சிக்கு ஒரு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குத்தரிசி கிலோ 18 ரூபாவாகவும், வெள்ளை நாடு கொத்து 19 ரூபாவாகவும் குறைந்துள்ளது.

இதேபோல மாவின் விலையும் மேலும் குறைந்து வருவதால் பாணின் விலை 6.50 ஆக சில இடங்களில் விற்கப்படுகிறது.

இதேபோல எரிபொருளின் விலையும் குறைந்து வருகிறது. 33 ரூ

## சிவில் ஓய்வூதியம் இன்றும்வழங்கப்படும்

இலங்கை வங்கி- ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் நேற்றுப் பின் பற்றப்பட்ட ஒழுங்கு வசதிகளுக்கமைய இன்றும் ஆகஸ்ட் மாத சிவில் ஓய்வூதியம் வழங்கப்படும். அத்துடன் வங்கி உண்டியல்கள் பெறவிரும்புபவர்கள் பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது, கி

## ரயர் போட்டு எரித்தனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கருவேப்பங்கேணி எனும் இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் 6 தமிழ் இளைஞர்களை ரயர் போட்டு எரித்துள்ளது, (71-ரூ)

## பாடசாலை சம்மேளன விசேட கூட்டம்

யாழ் மாவட்ட பாடசாலை அபிவிருத்திச் சம்மேளன விசேட கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் சாதனாக் கல்லூரியில் நடைபெறும்.

ஒவ்வொரு பாடசாலை கொத்தணிச் சம்மேளன அங்கத்தவர் இருவருடன் அவ்வப் பகுதி கொத்தணி அதிபர்களும் மற்றும் தேசியப்பாடசாலை அதிபர்களும், தனியார் பாடசாலை அதிபர்களும் இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். (70கி)

---

**யாழ் நகருக்கு ..**

வெளியே வந்த நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் மரணமானது.

இவரது கணவன் வரதராசாவுக்கு (32) வலது கால் துண்டிக்கப் பட்டது. இந்த வீட்டுக்கு அருகில் உள்ள கோண்டாவில் டிஸ்பென்சரியும் சேதமடைந்தது.

மகாதேவி சண்முகலிங்கம் (47) வலது காலை இழந்துள்ளார். சோமசுந்தரம் சண்முகலிங்கத்துக்கு (47) தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

கோண்டாவில் சந்தியில் தருமலிங்கம், திருமதி சிவபாக்கியலட்சுமி வேலாயுத பிள்ளை, சிவக்கொழுந்து கனகசபாபதி ஆகியோரது வீடுகள் பலத்த சேதமடைந்தன. சில கடைகளும் சேதமடைந்துள்ளன.

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் திருமதி புவனேஸ்வரி பாக்கியநாதன், டாக்டர் சண்முகலிங்கம், சோமசுந்தரம் ஆகியோரது வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

கொக்குவில் கோணாவில் ஒழுங்கையில் இடம்பெற்ற தாக்குதலில் அப்பையா சண்முகநாதன், தம்பிஐயா யோகராசா, பொன்னுத்துரை சண்முகலிங்கம், சிவசுப்பிரமணியம் ஆகியோரது வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இங்கு சிற்றம்பலம், மார்க்கண்டு, கனகரட்ணம் ஆகியோரது வீடுகளும் சேதமடைந்தன.

நல்லூர் கோவில் வீதியில் நடராசா, லோகேஸ்வரன், ஆகியோரின் வீடுகளுட்பட ஐந்து வீடுகள் பலத்த சேதமடைந்தன. (70-66-ப11-ரூ)

## ஆந்திராவில் ரயிலுக்குத் தீவைப்பு 47 பயணிகள் கருகி மரணம்

ஆந்திரப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ரயில் ஒன்றிற்குத்தீவைக்கப்பட்டதில்47 பயணிகள் உயிருடன் கருகி மாண்டனர். 14 பேர் கடுமையான தீக்காயங்களுக்குள்ளானார்கள்.

ஆந்திரப்பிரதேசத்திலுள்ள புகையிரத நிலையமொன்றில் இப்புகையிரதம் தரித்து நின்றசமயம் அங்கு வந்த சில இளைஞர்கள் பயணிகள் பெட்டிகளின் கதவுகளை மூடிவிட்டு அவற்றுக்குத் தீவைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. கி

## வேலணைப்பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது

வேலணை ப. நோ. கூ. சங்கம் தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு 1 ஆம் 2 ஆம் கட்ட நிவாரணங்களை வழங்கி வருகின்றது.

இச்சங்கம் தனது எல்லைக்குட்பட்ட மண்டைதீவு அல்லைப்பிட்டி, மண்கும்பான், பகுதி மக்களுக்கான நிவாரணப்பொருட்களை ஆங்காங்கே உள்ள அகதிகள் முகாங்களில் தற்காலிக கிளைகளை அமைத்து விநியோகித்து வருகின்றது. 19ரூ

## மனித ரூபத்தில்....

சாவகச்சேரிச் சந்தையில் நேற்று முன்தினம் பகல் ஹெலிகொப்டர் பயங்கரத் தாக்குதல் நடாத்திப் பெரும் விபரீதத்தை ஏற்படுத்திய வேளை நெஞ்சில் ஈரமே இல்லாத சில ஈன ஜென்மங்கள் பாதிப்புற்ற மக்களின் பணம், உடைமைகளை அபகரிப்பதில் இறங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் அல்லோலகல்லோலப்பட்ட பாதிக்கப்பட்ட பகுதி முழுவதும் இரத்த வெள்ளமாகக் காட்சியளித்த வேளை பிரஸ்தாப ஜென்மங்கள் பணம், சீனி மூடை, மா மூடை மற்றும் பொருட்களைக் களவாடினராம்.

சொந்தச் சகோதரர்கள் மாற்றானின் கொடூரத்திற்கு இலக்காகிய வேளை கிஞ்சித்தும் கருணையின்றி இத்தகைய இழி செயலில் ஈடுபட்டவர்களைத் தெய்வம் தான் தண்டிக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள். (ஸ்ரீ)

## 18 வயதுவந்தபிள்ளைகளே ஓய்வூதியம் பெறலாம்

ஓய்வூதியம் பெறுபவர்கள் எவராவது மரணமானால் அவர்களது ஓய்வூதியம் அவர்களின் பிள்ளைகள் பதினெட்டு வயதை அடைந்த பின்னரே இனிமேல் பெற்றுக் கொள்ள முடியும்.

முன்னர் இப் பிள்ளைகளுக்கு 21 வயது பூர்த்தியாக வேண்டும் என்ற நியதி இருந்தது.

இது தொடர்பான சுற்று நிருபம் சகல அரசாங்க அதிபர்களுக்கும் ஓய்வூதிய பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (66ரூ)

## போர்க்கால சூழல் குறித்து தென்மராட்சியில் கருத்தரங்கு

தற்போது ஏற்பட்டிருக்கும் போர்க்காலச் சூழலில் மாணவர்களின் போர்க்கால கல்வி பற்றிய கருத்தரங்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் ஆதரவில் இடம்பெற்றது

இதில் பாடசாலைகளைத் தொடர்ந்து நடாத்துவதில் உள்ள சிக்கல்கள் பற்றியும், மாணவர்களின் பாதுகாப்புப் பற்றியும் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடல் சாவகச்சேரிப் பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் பாப்பா, வட்டவைப் பொறுப்பாளர் கந்தண்ணா, மாணவர் இயக்கத் தலைவர் ரஞ்சன், மற்றும் கொத்தணி அதிபர்கள், சிற்றூரவைத் தலைவர்கள், அகதி முகாம் பொறுப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலைக்கு வரும் மாணவர்களின்பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத சூழ்நிலையால் பாடசாலைகளை நடாத்த முடியா நிலையில் இருப்பதாகவும் கூறப்பட்டது.

இறுதியில் பாடசாலைகளில் வகுப்புகள் நடாத்தப்பட மாட்டாது எனவும், அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் ஆசிரியர்கள் அப்பகுதி மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் எனவும் இதற்கு சிற்றூரவை மற்றும் பெற்றோர்கள் உதவுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கொத்தணிப் பிரிவுகளில் இதுபற்றிய கலந்துரையாடல் நடை பெற்று விபரம் அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. 71 ரூ

---

**வங்கி...**

பண நிலைமை குறித்து அவருக்கு முகாமையாளர் தெரிவித்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றது. 66ரூ

---

**ட்ராஸ்போமர் ..**

நடைபெற்றுள்ளதையடுத்து மக்கள் பலரும் கவலையடைந்துள்ளனர். (13-33-ரூ)

---

**வட பகுதி...**

பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக யாழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள் எதுவும் நடைபெறாமல் இருந்தது யாவரும் அறிந்ததே. (47-கி)

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 11-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.